## Faculty of Management & Commerce
## South Eastern University of Sri Lanka

# Proceedings of the Second Annual Research Conference - 2013

**On**

"The Emergence of Novelty in Business Management"

**PUBLISHED BY**
**FACULTY OF MANAGEMENT & COMMERCE**
**SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA**
**UNIVERSITY PARK**
**OLUVIL 32360**
**SRI LANKA**

**Faculty of Management & Commerce (FMC)**
**South Eastern University of Sri Lanka (SEUSL)**
**University Park**
**Oluvil, 32360**

**Phone** : - +94-67-2255069
**Fax** : - +94-67-2255069

www.seu.ac.lk/fmc

**ISSN: - 2279-1280**

**Copyright:-**

**© Faculty of Management & Commerce, South Eastern University of Sri Lanka**

**Disclaimer:-**

*All rights reserved. No part of this proceedings may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without written permission from the authors, except for the inclusion of brief quotations in a review. The material in this publication has been supplied by the authors, and only minor copy editing, if relevant, has been done by the FMC, SEUSL. The views expressed remind the responsibility of the named authors and do not necessarily reflect those of the FMC, SEUSL.*

**Editor in Chief:-**
Mrs. MAC. Sulaiha Beevi

**Associate Editor:-**
Mr. ALMA. Shameem

**Editorial Board:-**
Dr. MIM. Hilal
Dr. A. Jahfer
Ms. Hansiya Rauf
Mr. KM.Mubarak
Mr. MM. Shiraj

S.S.உதயகுமார் (1) & -ஞா.ஞானசச்சந்திரன் (2)

# போருக்குப் பின் இலங்கையின் வடமாகாண அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும் சவால்களும்.

1. சிரேஸ்டவிரிவுரையாளர் ,பொருளியற்துறை, யாழ்பல்கலைக்கழகம் ssuthayan@yahoo.com
2. முன்னாள் வருகைதரு விரிவுரையாளர், பொருளியற்துறை, யாழ்பல்கலைக்கழகம்

*ஆய்வுத் தலைப்பு –*

போருக்குப் பின் இலங்கையின் வடமாகாண அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும் சவால்களும்.

*ஆய்வுச்சுருக்கம்-*

இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் ஒன்றாக விளங்கும் வடமாகாணம் 8884 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டதோடு, ஏறத்தாள ஒரு மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களைக் தன்னகத்தே கொண்டது. 2011இல் இதன் GDP பங்களிப்பு 3.7% ஆகும். இது ஏனைய மாகாணங்களை விட மிகக்குறைந்தளவான பங்களிப்பாகும். இந்த ஆய்வின் பிரதானமான நோக்கம் வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை, அதன் உள்ளார்ந்த ஆற்றல்களை அறிவதோடு, பொருளாதார அபிருத்தியில் அது எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காண்பதாகவும் இருக்கும்.

வடமாகாண பின்தங்கிய அபிவிருத்திக்கு மூன்று தசாப்தகால யுத்தம் பிரதான காரணமாகும். வடக்கின் விவசாய நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருப்பது, செய்கை பண்ணப்படும் நிலங்களுக்கு நவீனதொழில்நுட்பபிரயோகம் இன்மை, சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் இதற்கு காரணம். மேலும் ஏராளமான வடக்கின் கைத்தொழிற்சாலைகள் இன்னும் இயங்காமல் உள்ளது. உயர்பாதுகாப்பு வலயத்துள் முடங்கியுள்ளது. ஏராளமான வங்கிக்களைகள், காப்புறுதி நிறுவனங்கள் நிதிக்கம்பனிகள் தமது கிளைகளை விஸ்தரித்து சேவைகள் துறை வளர்ச்சியடைந்தது போல் இருந்தாலும் 2011இல் 137730 Mill Rs பெறுமதியை பதிவு செய்தாலும் இங்கு கடன்களும், குத்தகையுமே கூடுதலாக உள்ளது. மக்கள் தற்போது பெருமளவு நிதிநெருக்கடிக்குள் உள்ளனர். காரணம் யுத்தம் முடிவிற்கு வந்த பின் பெருமளவு சொத்துக் கொள்வனவு, ஆடம்பர வீடுகளை கடனடிப்படையில் கட்டி தற்போது கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்துவதில் சிரமப்படுகின்றனர். வர்த்தர்கள், விவசாயிகள், எல்லோருமே கட்டடவாக்கத் துறையில் முதலிட்டு தற்போது சிரமப்படுகின்றனர்.இந்த ஆய்வின் இரண்டு எடுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. முதலாவது “போருக்குப் பின் வடமாகாண அபிவிருத்தி மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது.” இரண்டாவது “அபிவிருத்தித் துறைகள் குறைந்த வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.”மேலும் இவ் ஆய்வு இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, விபரணப்புள்ளிவிபரவியலைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

எனவே வடக்கின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்த அரசு உடனடியாக குறைந்த வட்டி வீதத்தை இவர்களுக்கு அறவிடுவதோடு,திருப்பிச் செலுத்தும் காலத்தைக் கூட்டி அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை கூட்டவேண்டும் சவால்களை வெற்றிகொள்ள உயர்பாதுகாப்பு வலங்களை விடுவித்தும், வெளிநாட்டு முதலீடுகளை வரவழைத்தும் உற்பத்தித்துறைகளை வளர்க்க வேண்டும். வடக்கை பொருளாதார விருத்தியிலும் ஏனைய பிராந்தியங்களோடு இணைக்க வேண்டும்.

முக்கிய சொற்பதங்கள்- GDP (மொத்த உள்நாட்டுஉற்பத்தி), நவீனதொழில்நுட்ப பிரயோகம், நிதிநெருக்கடி, வட்டிவீதம்.

*அறிமுகம்*

இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் ஒன்றாக விளங்குவது வடமாகாணம் இது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கொண்டது. இப்பிரதேசம் விவசாயநிலம், காடுகள், கனிப்பொருள் படிவுகள், ஈரநிலங்கள், கடற்கரைகள்,

பவளப்பாறைகள் என பெருமளவு இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்டது. மேலும் மொத்தநிலப்பரப்பில் 51% காடுகளாகவும், 31%விவசாய நிலங்களாகவும் உள்ளது. 2007 இலிருந்து 2011 வரை முறையே GDP இற்கு இம்மாகாணத்தின் பங்களிப்பாக 2.9%, 3.2%, 3.2%, 3.4%, 3.7% ஆக ஒரு அதிகரித்த நிலை வந்தாலும், முழு இலங்கையிலும் மிகக்குறைந்தளவான உற்பத்திப் பங்களிப்பை வழகங்குவதாக வடமாகாணம் உள்ளது குறிப்பிட வேண்டியது. மூன்று தசாப்த காலயுத்தம் இதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது.

இலங்கையில் 1977 திறந்த பொருளாதார கொள்கை அதன்வழி கட்டற்ற வர்த்தகக கொள்கை அமுல்படுத்தப்பட்டது. இதற்கு வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் உள்வாங்கப்பட்டன. உலகமயமாக்கலுக்குள் தங்களை இணைத்துக் கொண்டன. ஆனால் வடமாகாணம் விரும்பியோ விரும்பாமலோ இதில் இணைவதற்கு தடைகள் விதிக்கப்பட்டன. இதற்கு போர் பிரதான காரணமாகக் கூறப்பட்டது. ஏறத்தாழ 30 வருட தடை வடமாகணப் பொருளாதாரத்தில் பாரிய சரிவை ஏற்படுத்தியதென்றால் அது மிகையாகாது. வடமாகாணம் போருக்குப் பின்னரே தன்னை ஏனைய மாகாணங்களோடு இணைத்துக் கொண்டதால் அவற்றோடு போட்டிபோட முடியாத நிலை காணப்படுகிறது.

தென்னிலங்கையோடு உற்பத்தி வர்த்தகம் என்ற எதிலுமே போட்டிபோட முடியாத பலவீனமான நிலையிலேயே வடமாகாணம் உள்ளது அதன் பிந்திய உலகமயமாக்கலின் இணைவு என்றே கூறவேண்டும்.

பொதுவாக முதனிலைத் துறையான விவசாயத்துறையை தற்காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க முடியாமலுள்ளது. இதற்குப் பொருத்தமான பேரினப் பொருளாதாரக் கொள்கை முன்வைக்கப்படவேண்டும். யாழ்ப்பாணம்-கண்டி வீதி திறக்கப்பட்டபின் தென்னிலங்கை முயற்சியாளர்களின் வியாபார ஸ்தலதாக இது பயன்படுகிறதே தவிர எமது முயற்சியாளர்கள் அவர்களோடு போட்டிபோட முடியாத பலவீனமான நிலையிலேயே காணப்படுகின்றனர்.

***ஆய்வின் நோக்கம்.***

***பொதுவான நோக்கம்.***

1. வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை, அதன் உள்ளார்ந்த ஆற்றல்களை அறிதல்.
2. பொருளாதார அபிருத்தியில் அது எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காண்பதாகவும் இருக்கும்.
3. வடமாகாணத்தின் போருக்கு பின்னரான அபிவிருத்தியில் பொதுவான தொழில் முயற்சிகள், எதிர்கொள்ளும் இடர்களை அறிந்து கொள்ளல்.
4. அபிவிருத்தி சார்பாக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளை அறிதல், இங்கு இன்னும் எத்தகைய அபிவிருத்திச்செயற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதை ஆராய்தல் இந்த ஆய்வின் நோக்கம்.

***குறிப்பான நோக்கங்கள்.***

பொதுவான நோக்கங்களுக்கு மேலதிகமாக சிறப்பான நோக்கங்களும் வரையறுக்கலாம்.

01. வடமாகாணத்தின் பொருளாதார செயற்பாடுகள் இனங்காணல்.
02. இப்பிராந்தியம் எதிர்கொள்ளும் தொழில்சார் பிரச்சினைகள் இனங்காணல்.
03. அபிவிருத்திக்கான தடைகள் இனங்காணுதல்
04. அபிவிருத்தியை முன்னெடுக்கும் அரச,அரசசார்பற்ற,தனியார் அமைப்புக்களை தேவைகளை இனங்காணல்.
05. அபிவிருத்தி செய்ய வேண்டிய சிறப்பானதுறைகளை என்பதை இனங்காணுதல்.

***ஆய்வின் வரையறை.***

வடக்கின் அபிவிருத்தியின் பின்வரும் சவால்களை வரையறைகளாகக் குறிப்பிட முடியும்.

01. முப்பது வருடம் பிந்திய உலகமயமாக்கலின் இணைவு.
02. யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் முடிந்தும் வடக்குடன் தெற்கை இணைக்கும் புகையிரத இணைப்பு ஏற்படுத்தப்படாமை.
03. முதனிலைத்துறையில் உள்ள பின்தங்கிய தொழில்நுட்ப முறைகள்.
04. வடக்கில் பாரிய கைத்தொழில் ஆலைகள் மூடப்பட்டமை / இயங்காமை.

05. தனியார் முயற்சியாளர்களால் எதிர்நோக்கப்பட்ட நிதிநெருக்கடிகள்.

*இலக்கிய மீளாய்வு,*

இலங்கை முழுவதும் பொதுவாக வடக்கு அபிவிருத்தி சார்பாக பேசப்படுகிறது இவ்வாய்வுக்கு உறுதுணையாக அமைந்தவை என்ற ரீதியில் சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் மற்றும் யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் 2011 என்பவற்றின் வெளியீட்டிலே பேராசிரியர் வி.பி.சிவநாதன் எழுதிய "இலங்கையின் வடபுலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய ஒரு நோக்கு" என்ற ஆய்வுக்கட்டுரை உறுதுணையாக அமைந்தது. இதில் வடமாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் தாழ்நிலையில் உள்ளது என்பது கண்டயறிப்பட்டுள்ளது.

Uthayakumar, S. S.,(2011). என்பவர் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையின் செல்நெறியம் அபிவிருத்திக்கான வாய்ப்பக்களும்" என்ற ஆய்வில் வடமாகாணத்தில் போதியளவு வளங்கள் இருந்தும் அதனை நிர்வகிக்கும் ஆற்றல் அப்பகுதி மக்களிடம் இன்மையால் வளங்கள் விணடிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் இலங்கையின் வடக்குகிழக்கு அபிவிருத்தி என்ற 2010 பெப்ரவரி மார்ச் மாத பொருளியல் நோக்கும் வடக்குக் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு வடக்கின் பொருளாதாரத்தின் பின்தங்கிய நிலை கூறப்படுகிறது.

*ஆய்வுமுறையியல்.*

வடமாகாணத்தில் பொருளாதாரத்துறைகளை இனங்கண்டு அதனை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்ஆய்வு மேற்கொள்னப்பட்டுள்ளது. இங்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் என்ற ஆய்வுப் பிரதேசங்கள் இதனுள் அடங்குகிறது.

இப்பிரதேச அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள், சவால்களை ஆராய்வதற்கு இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைத் தரவுகளை வைத்தே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*தரவுப்பகுப்பாய்வு.*

இரண்டாம் நிலைத்தரவுகளையும், களஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப்பிரதேசம் சம்பந்தமான அடிப்படை அபிவிருத்திசார் குறிகாட்டிகளை நோக்கலாம்.இப் பிரதேசத்தில் 1.1 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள்.இது மொத்தக் குடித்தொகையில் 5% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பிராந்தியத்தின் மாதாந்த குடும்ப சராசரி வருமானம் 10,000-15000 என்ற வீச்சுக்குள் காணப்படுகிறது. வடமாகாணம் GDP இல் 3% பங்களிப்பை ஆற்றுகிறது. ஒப்பீட்டு ரீதியில் இது குறைந்தளவான பங்களிப்பாகும்.

*குடித்தொகை (ஆயிரத்தில்)*

| | *2009* | *2010* | *2011* | *2012* |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 607 | 611 | 617 | 585 |
| கிளிநொச்சி | 154 | 156 | 160 | 114 |
| மன்னார் | 103 | 104 | 105 | 100 |
| முல்லைத்தீவு | 154 | 148 | 144 | 92 |
| வவுனியா | 169 | 174 | 177 | 172 |
| | ***1187*** | ***1193*** | ***1203*** | ***1063*** |

ஆய்வுப் பிரதேசத்தில் குடித்தொகையானது 2012இல் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது அபிவிருத்திக்கான சவாலகவே உள்ளது.

வடக்கு மாகாணத்தின் முதன்மையான பொருளாதாரத்துறைகளான விவசாயம், கைத்தொழில், கடற்தொழில், சுற்றுலாத்துறை, தயாரிப்பு என்பன தம்மகத்தே கொண்டிருக்கும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை பிரச்சினைகளை இங்கு நோக்கலாம்.

*வடக்கு மாகாணப் பொருளாதாரக் கட்டமைப்பு (Million ரூபாய்களில்)*

| | *2009* | *2010* | *2011* |
|---|---|---|---|
| வேளாண்மை | 28582 | 30970 | 58464 |
| கைத்தொழில் | 14534 | 28836 | 45005 |
| பணிகள் | 112211 | 129933 | 137230 |
| | 155828 | 189740 | 241200 |

(மூலம் இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2012)

விவசாயத்துறையைப் பொறுத்தவரை பொருத்தமான மண்வகைகள் காணப்படுகிறது. வடக்கில் 60 சதவீதத்தினர் விவசாயத்துறையில் ஈடுபடுகின்றனர். தேசியரீதியில் விவசாயத்துறைக்கு இப்பிராந்தியம் 12 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. நெல், பச்சைமிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, மரமுந்திரிகை, புகையிலை, தென்னை, பனை முதலியன செய்கை பண்ணப்படுகின்றன. நெற்செய்கையில் வடமாகாணம் 10% பங்களிப்பையே தேசியரீதியில் வழங்குகிறது.

பச்சைமிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, மரமுந்திரிகை, புகையிலை போன்ற காசுப்பயிர்களின் பயிர்செய்கையும், பால் உற்பத்தி, கால்நடைவளர்ப்பு போன்ற கால்நடை

உற்பத்தியும் வடக்கின் பிரதான விவசாய நடவடிக்கைகளாகும்.போரினால் இவை அனைத்து உற்பத்திகளும் பாதிப்படைந்த நிலையில் புகையிலை மட்டும் விரிவடைந்து வரும் ஒரு காசுப்பயிராக உள்ளது.

வடமாகாணம் போருக்கு முன் பாரியளவான கால்நடை உற்பத்திகளை கொண்டிருந்தது. பால்வகைகள், சிற்றுண்டிகள், இறைச்சி என பல்தர உற்பத்திகள் இங்கு இடம்பெற்றன.போரினால் இடம்பெயர்வு, கால்நடைகளின் அழிவு, மேய்ச்சல் நிலங்களில் கண்ணிவெடிகள் கால்நடை உற்பத்தியில் வீழச்சியைப் பிரதிபலித்துள்ளது. இதற்கு அரசு கால்நடை உற்பத்தியாளர்களை உளக்குவிப்பதோடு, இதை வணிகஅடிப்படையில் மேற்கொள்ள உதவவேண்டும்.

வடமாகாணத்தில் போருக்குமுன் ஏறத்தாள 40,000 கடற்தொழிலாளர்கள் தொழில் செய்துவந்துள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கை தற்போது 20,000 ஆக குறைந்துள்ளது. போருக்கு முன் வடமாகாண மீன்உற்பத்தி 92000 தொன்களாகும்.இறால் நண்டு முதலிய பெறுமதியான மீன்வகைகளும், ஆசிய நாடுகளால் பெரிதும் விரும்பப்படும் கடல்நண்டும் இங்கு உள்ளது. இத்தொழிற்துறைசார் உள்ளார்ந்த வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. போருக்கு முன்னரான தடைகள் பின்னரும் முற்றாகத் தளர்த்தப்படவில்லை. நேரக்கட்டுப்பாடுகள், சக்தி குறைந்த இயந்திரப் பாவனை,இந்திய மீனவர்களின் ஆதிக்கம் இத்துறை எதிர்கொள்ளும் சவால்களாக உள்ளன. மீன்பிடித்துறையில் வடபுலம் அதற்கு பொருத்தமான கடல்ப் பிராந்தியத்தைக் கொண்டிருந்தாலும் கூட A9 திறப்பால் தென்னிலங்கை வியாபாரிகள் இங்கு வந்து மொத்தமாக கொள்வனவு செய்து செல்கின்றனர். இதனால் உள்ளூர் வியாபாரிகள் வாகன உடைமையாளர்களின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். சர்வதேச கடல் எல்லைகளைத் தாண்டும் மீனவர்களினைத் தடுக்கும் பொருட்டு ஒரு திட்டம் அமுல்ப்படுத்தவேண்டும்.

விவசாயத்துறை எதிர்கொள்ளும் சவால்கள்,பிரச்சினைகள் பற்றி நோக்கும் போது பெருமளவு நிலம் உயர்பாதுகாப்பு வலயத்துள் இருப்பதோடு கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் புதைக்கப்பட்டிருப்பதும் அச்சுறுத்தலாக உள்ளது. தொழில்நுட்பப்பாவனையின் பின்தங்கிய நிலையும், குறைபயன்பாடு, நீர்ப்பாசன முறையின் பற்றாக்குறை, களஞ்சியபடுத்தல் வசதிகளின் பற்றாக்குறை, நிறுவனரீதியான அமைப்புக்களின் பற்றாக்குறை என்பன குறிப்பிடக்கூடியன. தென்னிலங்கை வியாபாரிகள் விவசாயப் பண்ணைகளில் நேரடியாக வாகனங்களுடன் வந்து வெங்காயம் வாழைக்குலை, புகையிலை என்பவற்றை கொள்வனவு செய்கின்றனர். இது விசாயிகளின் வருமானத்தை மட்டுமல்ல அதை சந்தைப்படுத்தும் வியாபாரிகளின் வருமானம், காவிச் செல்வோர் வேலைவாய்ப்பு எல்லாவற்றையுமே பாதித்துள்ளது. விவசாயம் மீன்பிடி தமது ஊட்டிய பெறுமதியையும் இழந்திருக்கிறது.

கைத்தொழிற்துறை மிகப்பலவினமான நிலையில் உள்ளது கைத்தொழில் துறைகள் யாவும் அழிவடைந்த நிலையில் குறைஇயலளவில் உள்ளன. புடைவை, அலுமினியம், குளிர்பான உற்பத்திகள், சீமெந்துத் தொழிற்சாலை, வடிசாலை, இரசாயனத் தொழிற்சாலை, உப்பளம், ஓட்டுத்தொழிற்சாலை, கனியவளத் தொழிற்சாலை, பூந்தோட்டம் கைத்தொழில் வளாகம், மீன் பொதிசெய்யும் தொழில் செயலிழந்தும் மெதுவான பயன்பாட்டிலும் உள்ளது. இத்துறைசார் வேலை வாய்ப்புக்களும் இழக்கப்பட்டுள்ளன. போதிய சந்தை வாய்ப்புக்கள் பற்றாக்குறையாக உள்ளது. தவிர தகவல்நிலையங்கள் குறைவாக உள்ளன. போதியளவான பயிற்சி நிலையங்கள் இன்மை, தொழில்நுட்பப் பற்றாக்குறை, போதிய நிதிப்பற்றாக்குறை இங்கு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

இறுதியாக போரினால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையும் தற்போது வளர்ச்சியடைவதற்கான ஆற்றல்களைக் கொண்டுள்ளது. பெருமளவு வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தருவதோடு வருமானத்தையும் ஈட்டித் தரக்கூடியது. தற்போது தென்னிலங்கை மக்களின் பிரதான சுற்றுலாமையமாக வடமாகாணம் இருப்பது குறிப்பிடத்தக்கது. வடக்குத் தெற்கை இணைக்கும் புகையிரதப்பாதை கிளிநொச்சிவரை விஸ்தரித்திருப்பது போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட புரட்சியாகக் கொள்ளலாம்.

மேலும் நீண்டகாலத்தில் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதில் முதலீடுகளை உட்பாய்ச்சுவதில்,சர்வதேச சந்தைவாய்ப்புக்களை உருவாக்குவதில் தனியார்துறையின் பங்கு முக்கயமானது.

மொத்தஉள்நாட்டு உற்பத்தியில் வடமாகாணதின் பங்கு 2007 – 2.9%, 2008 – 3.2%, 2009 – 3.2%, 2010 – 3.4%, 2011 – 3.7% எனக் குறைந்த மட்டத்தில் உள்ளது. முழு இலங்கையின் ஏனைய மாகாணங்களை விட இது குறைவானது.

*முடிவுரை*

இவ்வாறான தரவுகள் தகவல்களைக் கொண்டு இப்பிராயந்தியத்தின் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும்

சவால்களும் பற்றி ஆராய்கிற போது பொதுவாக விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்ற அனைத்துத் துறைகளிலும் குறைந்தளவான பங்களிப்புக்கு மூன்று தசாப்தகாலயுத்தம் காரணமாகியது. மொத்த உள்நாட்டு உற்பத்திப் பங்களிப்பு, மூடப்பட்ட அழிவடைந்த கைத்தொழில்சாலைகள், சுவீகரிக்கப்பட்ட பெருமளவான விவசாய நிலம், உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்த சீமெந்து ஆலை (KKS) மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம், இரசாயனத் தொழிற்சாலை, ஓட்டுத்தொழிற்சாலை, உப்புக்கைத்தொழில் என பொருளாதார மையங்கள் எல்லாம் போரால் மூடப்பட்டுள்ளன. தற்போதும் இவை இயங்க வைப்பதற்கான எந்த ஆயத்தமும் இல்லை.இவை உள்ளார்ந்த ஆற்றல்களைக் கொண்டிருப்பதால் இவற்றை மீள் நிர்மானம் செய்யவேண்டும். எனவே இவற்றை இயங்க வைக்க அரசு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கண்ணிவெடிகள் பூரணமாக அகற்றப்படவேண்டும். இடம்பெயர்ந்தோர் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்.மேலும் பௌதீக மனிதவளப்பயன்பாட்டை அதிகரிக்க அரசதுறையோடு அரசசார்பற்றதுறை, தனியார்துறை என்பனவும் முன்வரவேண்டும். மேலும் சேதமடைந்த பொருளாதார சமூக உட்கட்டமைப்புக்கள் புனரமைக்கப் படவேண்டும். மேலும் இப்பிராந்திய மக்களுக்கு வேண்டிய சமூக பொருளாதார வலுவூட்டல் மேற்கொள்ள வேண்டும். வெளிநாட்டு முதலீடுகள் வழவழைக்கப்பட வேண்டும். மூன்று துறைகளிலும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு உற்பத்தி வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் வடமாகாணத்தின் உற்பத்தி இயலளவைக் கூட்டி பிராந்திய சமத்துவத்தையும் ஏற்படுத்தும் போது தேசியப்பொருளாதாரத்துக்கு காத்திரமான பங்கை வடமாகாணம் வழங்கமுடியும்.

**உசாத்துணை நூல்கள்**


1. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை-2011,2012

2. வடமாகாண புள்ளி விபரக்கையேடுகள்

3. சிந்தனைக்கூடம் யாழப்பாணம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் என்பவற்றின் வருடாந்த சஞ்சிகை.- 2013

4. பொருளியல் நோக்கு-2010 பெப்ரவரி மார்ச்

5. இணையத்தளம்- www.np.gov.lk.,www.CBSL.lk

6. Uthayakumar, S. S.,(2011). இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையின் செல்நெறியம் அபிவிருத்திக்கான வாய்ப்பக்களும்” P Resource, Utilization and development Strategies in Jaffna district, Cintanai Koodam, council of NGOS' Jaffna District. P: (27-33), ISBN No. 978-955-53788-0-2

7. *U*thayakumar, S. S., (2011). Industrial opportunities in Jaffna District. Chairperson's Address. ***Proceedings of the 18th Annual Sessions of Jaffna Science Association.*** **18(2):** 31-59 ISBN No. 1391-4588

8. Uthayakumar, S. S., (2011). Industrial development oppountities selected DS Division. South Eastern University, ISBN No. 0959 – 3993 p86.